வார்த்தை முடிந்து விட்டது. இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்றாலும் இடம் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பதால், அந்த இடம் நமக்குப பிரயோசனமாக இருக்கும் என்ற வகையில் அதைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். ஆகவே, அதைப் பற்றி விவாதிப்பதற்குச் சபையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனை ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு முற்றிலும் உரியதல்ல. மண்டபத்தில் இருக்கக்கூடிய கட்டடங்கள் சிலோன் அரசாங்கச் சொத்து. " மைக்ரேஷன் டெப்போ " ஆக இருந்தது. அதை விற்க முற்பட்டார்கள். யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். இந்த மாநில அரசாங்கம் அதை வாங்க வேண்டுமென்ற அளவில் ஒரு விலை மதிப்பு போட்டது. அவர்கள் ஒரு விலை சொன்னார்கள். நாம் ஒரு விலையைச் சொன்னோம். அது இன்னும் பேச்சு வார்த்தையில்தான் இருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றி எனக்குத் தெரியாது. நமக்குத் தெரியாமலே ஏதேதோ செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. மேற்கொண்டு பேசி அவர்கள் சொல்கிற விலை பிடித்தமாக இருந்தால் வாங்கப்படும். பேச்சு வார்த்தை முறிந்து போய்விட்டது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

MR. SPEAKER : This does not come under an adjournment motion.

III.—CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

" That Demand Nos. V—Registration Department.
XI—Jails
XVII—Fisheries.
XIV —Stationery and Printing.

scheduled to be taken up on Tuesday, the 23rd March 1965, be taken up on Saturday, the 27th March 1965 and that Demand Nos.

I—Land Revenue Department
IV—Stamps Administration
XXXI—Famine Relief
XXXVII—Compensation to Zamindars

scheduled to be taken up on Saturday, the 27th March 1965, be taken up on Tuesday, the 23rd March 1965 ".

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66—*cont.*

(1) DEMAND NO. XX—INDUSTRIES.

(2) DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 6,29,95,800 under Demand No. XX—Industries ".

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி வற்புறுத்த என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்